THIRUMATHI T. N. ANANDANAYAKI : Vegetable market has been opened at Government Estate but it is in a hopeless state of affairs. Will the Government do something to set it right?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : இது ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் பற்றியது. காய்கறிகள் பெரிஷபுள் குட்ஸ் ஆனதால் ரூ. 22.5 லட்சத்தில் ஆங்காங்கே குளிர்பதன சாதன அமைப்பை ஏற்படுத்தவும் யோசிக்கப்படுகிறது.

திரு. ஏ. சுப்பிரமணியம் : புதியதாகத் தொடங்க இருக்கிற ரெகுலேடட் மார்க்கெட் காய்கறிக் கடைகள் கவர்மெண்டு எஸ்டேட் காய்கறிக் கடையின் கதிக்கு ஆளாகாமல் இருக்க தக்க பாது காப்பு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர்: தலைவர் அவர்களே, கவர்ன்மெண்டு எஸ்டேட் காய்கறிக் கடை நிலைமை வேறு. அங்கே சரியாக விளைவதில்லை. காரணம், போதுமான தண்ணீர் வசதியில்லை. வெளியில் இருந்து கொண்டுவர வேண்டியிருக் கிறது.

திரு. ஏ. ஆர். சுப்பையா : ரெகுலெடெட் மார்க்கெட் நல்ல முறையில் செயல்பட வேண்டும் என்று தான் சட்டத்தைத் திருத்தியிருக்கிறார்கள். அதை அமல் படுத்தத் தயாராக இருக் கிறார்களா ?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனர் : சட்டத் திருத்தம் ஆய்வில் இருக்கிறது.

Sevices of employees of Local Bodies

* 287 *Q.*—THIRU N. K. PALANISWAMY : Will the Hon. Minister for Local Administration be pleased to state—

(a) whether the Tamil Nadu Municipal and Corporation workers have submitted a memorandum to the Government during 1973 regarding fixing of wages, service conditions; and

(b) if so, the action taken thereon?

1974 மார்ச் 7]

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : (அ) இல்லை.

(இ) இவ்வினா எழவில்லை.

திரு. என். கே. பழனிசாமி : பஞ்சப்படி, சம்பளம் சேர்த்து நூறு ரூபாய் என்று ஒப்பந்தம் செய்திருக்கிறது. மற்ற தொழிலாளர்களை எடுத்துக் கொண்டால் இந்த அளவுக்குக் குறைவாக இருப்பதின் காரணமாக கார்ப்பரேஷனில் தற்காலிகமாக என்று ஆட்களை அதிகமாக வைத்து மஸ்தர்ரோல் ஊழல் ஏற்படுகிறது. அதைத் தவிர்க்க ஊழியர்கள் நிரந்தரமாக்கப் படுவார்களா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : இப்போதே அவர்கள் நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். தற்காலிக ஊழியர்களுக்கு எல்லாம் அடையாள கார்டு கொடுக்கப் பட்டிருக்கிறது. நிரந்தரமாக்கவும் முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

THIRU K.M. SUBRAMANIAM. Is the Government aware that there is manipulation going on in Madras City Corporation not to confirm temporary workers which result in muster roll scandal like the present one and casual labourers are employed in thousands. Will the Government give a direction to the Corporation to confirm all labourers who had put in two or more years' service?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : மஸ்டர் ரோல் ஊழலில் தற்காலிகமாகக் கூட வேலையில் இல்லாதவர்கள் பெயர்கள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. ஆகவேதான் இருப்பவர்களுக்கு இப்போது அடையாள கார்டு கொடுக்கப்பட்டு, தொடர்ந்து பத்து ஆண்டுகள் வேலை செய்தவர்கள், ஐந்து ஆண்டுகள் வேலை செய்தவர்கள் என்று நிரந்தரமாக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

திரு. வை. பாலசுந்தரம் : மாநகராட்சி சுடுகாடுகளில் பணிபுரிகிற தொழிலாளர்கள் நிரந்தரமில்லாதவர்களாக இருக்கிறார்கள். அதனால் அதில் பல சங்கடங்கள் இருக்கின்றன. ஆகவே சுடுகாடுகளில் பணிபுரிகிற தொழிலாளர்களை அரசு ஊழியர்களாக அங்கீகரிக்க அரசு முன்வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அப்படி ஒன்றும் இல்லை.

திரு. ஆர். பொன்னப்ப நாடார் : பல ஊராட்சி மன்றங்களில் அவர்களது பொருளாதாரம் மிகவும் நலிந்த நிலையில் இருக்கிறது. சிப்பந்திகளுக்கு சம்பளம் கொடுக்கக் கஷ்டமாக இருக்கிறது. அந்தச் சம்பளங்களை அரசாங்கமே கொடுக்க வழிவகை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : அது பரிசிலனை செய்யப்பட்டு வருகிறது. இதுபற்றிய டிமாண்டு வரும்போது அறிவிப்புக் கொடுக்கலாம் என்பதாக முதலமைச்சர் சூசகமாகத் தெரிவித்திருக்கிறார்கள்.

திருமதி த. ந. அனந்தநாயகி : மாநகராட்சி மன்றம், நகராட்சி மன்றங்களில் மொத்த வருமானத்தில் 43 சத வீதம் சம்பளமாகவே போகிறது. ஆகவே இந்த அளவுக்குத்தான் நிர்வாகச் செலவு செய்யலாம் என்கிற வரையறையை ஏற்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : தோட்டத்தில் பாதிக் கிணறு என்பதுபோல நகராட்சியில் மட்டும் அல்ல, எங்கும் அதிகாரிகள் சம்பளமாகவே போகிறது, அது பற்றி உடனடி சிக்கல் ஏற்படாது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

*288 வினா—**திரு. நா. வீராசாமி :** மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடை பயளிப்பாரா—

(அ) சென்னை மாநகராட்சி மின்னியல் பிரிவில், குறிப்பாக நீர் வழங்கு துறையில் உதவி மேற்பார்வையாளர் (Assistant Supervisor) பதவிகளுக்கு, அரசு இரண்டாவது ஊதியக்குழு அறிவித்த புதிய சம்பள விகிதங்களின் காரணமாக சம்பளக் குறைவு ஏற்பட்டிருப்பது குறித்து முறையீடு ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆமெனில், அதன் மேல் அரசு எடுத்த நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் :

(அ) ஆம்.

(இ) ஒரு நபர் ஆணைக்குழு, முறையீட்டை ஆய்வு செய்ததில் உதவி மேற்பார்வையாளர்களுக்கு அனுமதிக்கப்படும் சம்பள விதத்தில் முரண்பாடு எதுமில்லை என்று கருத்துத் தெரிவித் துள்ளது.

1974 மார்ச் 7]

(முற்பகல் 10-00)

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, மாற்றியமைக்கப் பட்ட சம்பள விகிதங்களின்படி இப்பொழுது அஸிஸ்டெண்ட் சூப்பர்வைசர்களாகப் பணியாற்றுகின்றவர்களுக்கு மற்ற இலாக் காக்களில் வேலை பார்க்கின்ற டிப்ளமா ஹோல்டர்களுக்குக் கொடுப் பதைவிட 50 ரூபாய் குறைத்துக் கொடுக்கப்படுகிறது. இந்த முரண்பாடு இருக்கக்கூடாது, அவர்களுக்கும் அதைக் கொடுக்க வேண்டுமென்ற முறையிலே நகரமன்றங்கள் எல்லாம் சிபாரிசு செய்து ஒரு நபர் குழுவின் பரிசிலனைக்கு அனுப்பியது. ஆனால் அந்தக் குழுவும் அஸ்ஸிஸ்டெண்ட் சூப்பர்வைசர்களுக்கு 50 ரூபாய் குறைவாகத்தான் இருக்க வேண்டுமென்ற முறையிலேதான் சிபாரிசு செய்திருக்கிறது. அந்த நிலைமையை மாற்றி எல்.சி.இ., எல்.இ.இ. ஆகிய எல்லாம் ஒரே கேட்டிகிரி என்று பாவித்து, அவர்களுக்கும் அந்தச் சம்பள விகிதத்தைக் கொடுக்க அரசு முன் வருமா ?

மாண்புமிகு திரு. அ. பெ. தர்மலிங்கம் : சர்க்கார் துறையில் உதவி சூப்பர்வைஸர்களாக இருக்கின்றவர்களையும், மாநகராட்சி யில் உதவி சூப்பர்வைஸர்களாக இருக்கின்றவர்களையும் ஒரே கிரேடாகக் கருத முடியாது என்று தனி நபர் குழு கூறியிருக் கின்ற காரணத்தினாலே அதைப் பற்றி இப்பொழுது பரிசீலிப்ப தற்கு இல்லை.

Houses for Artists

* 328 *Q.*—THIRU N. DENNIS :
THIRU N. KITTAPPA :
THIRU V. BALASUNDARAM :
THIRU P. SOUNDARAPANDIAN : Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) whether the South Indian Artists' Association has sent any memorandum to the Hon. Chief Minister around 16th August 1973 regarding housing schemes for the Artists; and

(*b*) if so, the details thereof?

மாண்புமிகு திரு. க. இராசாராம் : (அ) ஆம். (இ) தென் னிந்திய திரைப்பட நடிகர்களுள் குறைந்த வருவாயுள்ளவர்களுக் காக வீடுகள் கட்டும் திட்டம் வீட்டு வசதி வாரியத்தின் ஆய்வில் உள்ளது. வீடு கட்டுவதற்குத் தேவைப்படும் நிலங்களைக் கையகப்